# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## துணைவேந்தர் பதவி

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் பிரகாரம் மற்றும் செயற்படுகின்ற திறந்த பல்கலைக்கழகத்தின் பேரவை, பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக முகாமைத்துவம் செய்யவும், வழிநடத்துவதற்கும் பொருத்தமான தகைமை மற்றும் அனுபவம் மிக்கவர்களிடம் இருந்து விண்ணப்படிவங்கள் கோருகின்றது.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சட்டத்திற்கு அமைவாக, துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தரும், பிரதம நிறைவேற்று அதிகாரியும், கணக்கீட்டு அதிகாரியும் பல்கலைக்கழகத்தின் கல்விசார் தலைரும் ஆவார். அவர் பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினரும், தலைவரும் ஆவார்.

துணைவேந்தர் குறித்த பதவி காலத்திற்கு முன்னதாக பதவியிலிருந்து வெளியேறாவிட்டால் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படாவிட்டால், 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் அதன் பின் வந்த திருத்தங்களின் அமைவாக, மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள், இவ்விரண்டில் எது முன்வருகிறதோ அது வரை பதவி வகிப்பார்.

துணைவேந்தர் கல்விசார் தலைமைத்துவத்தினை வழங்குதல், சீரான முகாமைத்துவ கொள்கை ஒன்றினை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், மற்றும் நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றிற்கு பொறுப்பானவராக இருப்பார். விண்ணப்பதாரி பல்கலைக்கழக விவகாரங்களின் முகாமைத்துவத்தில் வெளிப்படைத் தன்மை, பொறுப்புக் கூறல் என்பவற்றினை பேண வேண்டும். விண்ணப்பதாரி பேரவை தீர்மானங்களை அமுல்ப்படுத்துதல், பல்கலைக்கழகத்தினுள் ஒழுக்க விழுமியங்களை பேணல் மற்றும் அதன் பொதுநிர்வாகம் ஆகியவற்றிற்கும் பொறுப்பானவராக இருப்பர்.

துணைவேந்தர் கல்விசார் சிறப்பு தகைமையினை பேணுவதில் அர்ப்பணிப்புள்ளவராகவும் மாணவர் மற்றும் பணியாளர்களின் தேவைகள் பற்றிய புரிந்துணர்வு கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி மிகச் சிறந்த சாதனைப் பதிவுகளுடன் உயரிய பண்புடையவராகவும், சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவராகவும் மாணவர் மற்றும் அலுவலர்களின் பல்வகைப்பட்ட ஆர்வங்களை இனங்காணக்கூடிய ஆற்றல் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளூர் சமூகத்திற்கான கடப்பாடுகள் உள்ளடங்களாக பல்கலைக்கழகத்தின் செயல்நோக்கு கூற்றுப் பற்றிய புரிதலினைக் வெளிக்கொணரக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். (விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரர்கள் மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைத்தளமான *http://www.ou.ac.lk* இல் பெற்றுக்கொள்ள முடியும்.)

துணைவேந்தர் அதிஉயர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவர் என்பதோடு, அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாக பெற்றுக்கொள்வதற்கும், பதவிக்குரிய பிற கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கும் உரித்துடையவராவர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 10.04.2023 அன்று வெளியிடப்பட்ட03/2023 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்வாறு துணைவேந்தரை நியமிப்பதற்கான தெரிவு முறைமை அமையும். நடைமுறை மற்றும் நியமனத்திற்கான அச்சுற்றுநிருபத்தினை எனும் இணையத் தளம் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்ப முடிவுத் திகதியன்று அறுபத்து மூன்று (63) வயதிற்கு குறைவானவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

i. பிறந்த திகதி உள்ளடக்கலாக விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக்கோவை ஒன்று

ii. விண்ணப்பதாரர் அவர் துணைவேந்தராக நியமிக்கப்படும் பட்சத்தில் அவரால் முன்மொழியப்படும் திறந்த பல்கலைக்கழக அபிவிருத்திக்கான தூரநோக்குப் பற்றிய தனிப்பட்ட அறிக்கை மற்றும் அவர் எய்த எண்ணியிருக்கும் அடைவுகள் பற்றிய சுருக்கமான அறிக்கை

iii. விண்ணப்பதாரர் தற்போதைய துணைவேந்தர் எனின், மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக அவர் தன்னுடைய (முதலாவது) பதவி காலத்தில் சாதித்த சாதனைகள் பற்றியும் அடைவுகளை விசேடமாகக் குறிப்பிட்டு அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரர் அரச பொதுச்சேவை, கூட்டுத்தாபனங்கள் நியதிச்சபைகள், இலங்கை திறந்த பல்கலைக்கழம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பனவற்றில் ஏதாவதொன்றில் சேவை புரிபவராயின், அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் அவரை விடுவிக்க முடியுமா என்பதனை தெரியப்படுத்தும் தொழில்தருநரின் கடிதம்.

விண்ணப்பதாரிகள் மதிப்பீட்டுக் குழுவினால் நேர்முகத்தேர்விற்கு தோற்ற அழைக்கப்படுவர். தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக, விண்ணப்பதாரி எவரேனும் ஒருவருக்கு மதிப்பீட்டுக் குழுவின் முன் நேரடியாக தோற்ற முடியாது போயின், செயலாளருக்கான முன்னறிவித்தல் ஒன்றின் மூலம் அவர் **மெய்நிகர் வழியாக** நேர்முகத் தேர்விற்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்.

மதிப்பீட்டுக் குழுவினால் தெரிவு செய்யப்பட்டு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் குறைந்தது பத்து நிமிடங்கள் (10) எனினும் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாமல் குறுகிய முன்னிலைப்படுத்துகை ஒன்றிற்காக விசேட பேரவைக் கூட்டம் ஒன்றிற்கு அழைக்கப்படுவார்.

உரிய ஆவணங்களுடன் விண்ணப்பங்கள் **திருமதி.டபிள்யூ.எல்.விந்த்ய ஜயசேன, பேரவை செயளாலர், பதிவாளர் அலுவலகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல, நுகேகொட** என முகவரியிடப்பட்டு **10.01.2024 அன்று பி.ப.03.00 மணி அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கக் கூடியவாறு அந்தரங்க உறையில் இடப்பட்டு பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது நேரடியாக கையளிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் மென்பிரதியுடன் வேறு ஏதேனும் துணை ஆவணங்கள் இருப்பின் அவற்றினையும் இணைத்து PDF வடிவில் registrar@ou.ac.lk எனும் இலத்திரனியல் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் எந்த ஒரு விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “துணைவேந்தர் பதவி” எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**டபிள்யூ.எல்.விந்த்ய ஜயசேன,**
**பதிவாளர் மற்றும் பேரவை செயளாலர்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**நாவல,**
**நுகேகொட.**

10th டிசம்பர் 2023

University Web Page : www.ou.ac.lk